[திரு. ச. இராமச்சந்திரன்] [1799 ஏப்ரல் 27

காவல் நிலைய ஆய்வாளர் ஒருவர் ஒரு கோஷ்டியுடன் ஸ்தலத்திற்கு விரைந்தார், அந்தச் சமூக விரோதிகள் கல்லூரியை நோக்கி கற்களை எறிந்த நேரத்தில். மாணவர்கள் திரளாகத் திரண்டு அவர்களைத் துரத்தி திருப்பித் தாக்க பீட்டர்ஸ் ரோட்டில், இருதரப்பினரிடமிருந்தும் கற்கள் சரளமாக வீசப்பட்டன, போலீசாரின் அடுத்தடுத்த எச்சரிக்கையும், சமாதான முயற்சியும், பலனளிக்காத காரணத்தால், அவ்விடத்திற்கு வந்த சைதாப்பேட்டை காவல்துறை உதவி ஆணையாளர் அவர்கள், இருதரப்பினர் மத்தியில் மேலும் கிளர்ச்சி வலுக்காமல் இருக்கவும், சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படாமல் இருக்கவும், கண்ணீர்ப்புகை குண்டுகள் வெடிக்குமாறு உத்தரவிட்டார். அது உடனே பலன் அளித்து, கூட்டம் கலைந்து நிலைமை கட்டுக்கு கொண்டு வரப்பட்டது, ஈ-2. ராயப்பேட்டை காவல் நிலையத்தில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணையில் உள்ளது, இதன் தொடர்பாக 14 பேர்கள் கைது செய்யப்பட்டனர்,

2. இந்தச் சமூக விரோதிகள் புதுக் கல்லூரியில் நுழைந்து கற்களை எறிந்து, மணி (3-வது ஆண்டு பி, எஸ், சி,) என்ற மாணவருக்கு காயத்தை உண்டாக்கிவிட்டு, ஒரு சைக்கிளையும் திருடிச் சென்றுவிட்டதாக, புதுக் கல்லூரி மாணவர் தலைவர் திரு. சிவகுமார் ஒரு புகாரை, கொடுத்தார், அதன்படி ஈ-2 ராயப்பேட்டை. காவல் நிலையத்தில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது, காயம் பட்ட மாணவர் மணி, ராயப்பேட்டை மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டதில், அவர் அங்கு புற நோயாளிகள் பிரிவில் சிகிச்சை பெற்றார், இது சம்பந்தமாக ஹால்ஸ் கார்டனைச் சேர்ந்த நந்தகுமாரும் மற்ற இருவரும் கைது செய்யப்பட்டனர், கல்லூரியைச் சுற்றியும், உள்ளேயும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது, நகர காவல் ஆணையாளரும், காவல்துறை ஆணையாளர் சட்டமும் ஒழுங்கும் (தெற்கு சரகம்) அவர்களும் ஸ்தலத்திற்கு விஜயம் செய்து தக்க ஏற்பாடுகளைச் செய்தனர். நிலைமை அமைதியாக இருக்கிறது,

[முற்பகல் 10-20]

ஆ. மின்சாரம் வழங்காததால் திருநெல்வேலி மாவட்டத்தில் வெற்றிலைப் பயிர் வாடுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் இரா. அமிர்தராஜ், யா.சை.மு. யூசுப் ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு மின்சாரத்

1979 ஏப்ரல் 27] [பேரவைத் தலைவர்]

துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. இரா. அமிர்தராஜ் அவர்கள் அதனை முன் மொழிவார்கள்.

*திரு. இரா. அமிர்தராஜ்: பேரவை தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"திருநெல்வேலி மாவட்டம் உடன்குடி, பிச்சுவிளை ஆகிய பகுதிகளில் முறையாக மின்சாரம் வழங்காததால் வெற்றிலைப் பயிர்கள் வாடி விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து."

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு மின்அமைப்பு சூழ்நிலைக்கு ஏற்ப, மின்சார குறைப்பின் காரணமாக, கடந்த 14—3—1979 முதல் 26—3—1979 வரை மின் சப்ளை சீராக இல்லை. 27—3—1979 இரவு முதல் காலை 4 மணி நேரமும், இரவில் 6 மணி நேரமும் ஆக ஒரு நாளைக்கு 10 மணி நேர வீதம் சீராக மின்சப்ளை வழங்கப்படுகிறது.

திரு. இரா. அமிர்தராஜ்: பேரவைத் தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டம், உடன்குடி பிச்சுவிளை ஆகிய பகுதிகளில் சுமார் 500 ஏக்கர் நிலங்களுக்கு மேல் வெற்றிலைப் பயிர் விவசாயம் செய்து வருகிறார்கள். அந்தப் பகுதியில் ஆற்றுப் பாசனமோ குளத்துப் பாசனமோ எதுவும் கிடையாது. அங்குள்ள அனைவரும் மின்சார மோட்டார் உபயோகிக்கிறார்கள். தற்போது அமைச்சரவர்கள் 10 மணி நேரம் மின்சாரம் வழங்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். ஆனால் அங்கு வழங்கப்படுகின்ற மின்சாரம் தொடர்ச்சியாக வழங்கப்படாமல் அரை மணி நேரத்திற்கு ஒரு முறை தடைப்பட்டு, தடைப்பட்டு வருகிறது. அந்தக் காரணத்தால் அங்கு அதிகமான பாதிப்பு ஏற்படுகிறது. குறிப்பாக கடந்த 22—4—1979 அன்று மின்சார சப்ளை முழுவதுமாக நிறுத்தப்பட்டு விட்டது. இரவு 8.10 மணிக்குத்தான் வந்தது. இப்படிப் பல நாட்கள் தொடர்ந்து நடப்பதால் விவசாயிகள், எப்போது மின்சாரம் வரும், எப்போது மின்சாரம் நின்றுவிடும் என்று கூடத் தெரிந்துகொள்ள முடியாமல் கடுமையான கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். மேலும் பயிர்களும் வாடிப்போகின்ற நிலைமை ஏற்படுகிறது. அதனால் வழங்கப்படுகிற மின்சாரம் இடையிடையே தடைப்படாமல் தொடர்ச்சியாக கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுத்து ஆவன செய்யவேண்டும் என்று நான் அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

[1979 ஏப்ரல் 27

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இரவில் ஆறு மணி நேரமும் பகலில் நான்கு மணி நேரமும் தடை இல்லாமல் தொடர்ந்து மின்சாரம் வழங்கவேண்டும் என்று மின்சார வாரியத்திற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சில நேரங்களில் தவறுகின்ற காரணங்களால் மின்ஓட்டத்தேவை அதிகப்படுகிறபோது இப்படிப்பட்ட தடைகள் ஏற்படுவதுண்டு. தடைகள் இல்லாமல் பார்த்துக்கொள்ளப்படும்.

இ. திருவிளையாட்டம் சிவகாமசுந்தரி ஆலய அம்மன் சிலை திருடு போனது குறித்து

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவரவர்களே நான் கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர் களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

"தஞ்சாவூர் மாவட்டம் மாயூரத்தை அடுத்த திருவிளை யாட்டத்தில் உள்ள சிவகாம சுந்தரி ஆலயத்திலிருந்து சிவகாம சுந்தரி சிலை திருட்டுப் போனதையடுத்து அங்கு நிலவும் பதட்ட நிலை குறித்து".

திரு. ஐசரி வேலன்) [அமைச்சரின் பேரவை செயலர்] : தஞ்சை மாவட்டம், மாயூரம் வட்டம், திருவிளையாட்டம் கிராமத்திலுள்ள அருள்மிகு சுயம்புநாதஸ்வாமி ஆலயத்திலிருந்து ஒரு அம்மன் விக்கிரகம் 10—3—1979 அன்று இரவு திருடப் பட்டது. மறு சாவி போட்டு பூட்டைத் திறந்து திருட்டு நடந்தி ருப்பதாகத் தெரிகிறது.

2. ஆலயத்தின் செயல் அலுவலர் 11—3—1979 அன்று மாயூரம் வட்டம் பெரம்பூர் காவல் நிலயைத்தில் புகார் செய்த தின் தொடர்பாக திருட்டுக் குற்ற எண். 50/79-ல் இந்தியன் குற்றவியல் சட்டக்கோவை (I. P. C.) 457 மற்றும் 380-ன் கீழ் வழக்குப்பதிவு செய்து புலன் விசாரணை துவங்கப்பட்டது. விரல் பதிவு (கை ரேகை) வல்லுநர் களவு நடந்த இடத்தை பரிசோதித்தார். காவல்துறையைச் சார்ந்த மோப்பம் பிடிக்கும் நாயும் அங்கே அழைத்துச் செல்லப்பட்டது. புலன் விசாரணை தொடர்ந்து நடக்கிறது.

3. மேற்படி அருள்மிகு சுயம்புநாதஸ்வாமி கோயிலில் இருந்த விக்கிரகங்கள் மொத்தம் 21. இந்தக் களவு நடப்பதற்கு முன்பே தொன்மை வாய்ந்த 14 விக்கிரகங்கள் பாதுகாப்பு நிமித்தம் அருகாமையிலுள்ள விளநகர் அருள்மிகு வரதராசப் பெருமாள் ஆலயத்தில் கொண்டு வைக்கப்பட்டுள்ளன. பொது மக்கள் ஆட்சேபம் தெரிவித்ததால் ஏனைய விக்கிரகங்கள் சிவன்